OS.No. :8/2024

நாள் : 07. 12.2024

பி.வா.சா. :1

பெயர் :கோபாலக்கிருஷ்ணன்

**7,8,9, பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி இந்திராணி என்னுடைய தாயார் என்றால் சரி. 1ம் பிரதிவாதி ஜெயக்குமார் என்னுடைய மூத்த சகோதரர் என்றால் சரி. ஜெயக்குமார் வழக்கிற்க்கு பிறகு இறந்து விட்டார் என்றால் சரி. அவரது வாரிசுகள் தான் 7 முதல் 9 பிரதிவாதிகள் என்றால் சரி. என் அப்பா பெயர் சக்கரவர்த்தி அவருக்கும் இந்திராணிக்கும் பிறந்தவர்கள் 1 மகள் 4 மகன்கள் ஆகியோர். மகன்கள் பெயர் ராஜசேகரன் (இறந்துவிட்டார்) ஜெயக்குமார் (இறந்துவிட்டார்), பிரகாஷ், கோபாலக்கிருஷ்ணன் (நான்) ஆகியோர் அக்கா பெயர் சித்ரா. 5, 6 பிரதிவாதிகள் கடையில் வாடகைக்கு இருந்தவர்கள். ராஜசேகரன் திருமணமாகாமல் இறந்து விட்டார். இவ்வழக்கில் கண்ட பிரகாஷ், என்பவருக்கு தனிப்பட்ட சொத்து உள்ளது என்றால் அவர் வெளிநாடு போய் சம்பாதித்த சொத்தும் அவரது மைத்துனர் உதவி செய்து வாங்கிய சொத்தும் அவரது தனிப்பட்ட சொத்தாக உள்ளது. நான் எந்த சொத்தும் வாங்கவில்லை. எந்த சொத்தும் விற்பனை செய்யவில்லை. நான் எனது தாயாரிடமிருந்தோ சகோதரனிடமிருந்தோ ரொக்கமாக பணம் எதுவும் வாங்கியிருக்கிறேனா என்றால் இல்லை. குடும்பத்தில் வேறு யாரும் ரொக்கமாக பணம் வாங்கினார்களா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணையில் வேறு யாராவது பணம் வாங்கியதாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் பணம் கொடுத்திருக்கிறேன். பணம் எதுவும் வாங்கவில்லை. நான் என் தாயார் இந்திராணி, பிரகாஷ், சித்ரா ஆகியோர் ஒற்றுமையாக இருக்கிறோம் என்றால் சரி. பிரகாஷ் பாகம்கோரி OS 72/2012 என்ற வழக்கை கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார் என்றால் சரி. பிரகாஷ் போட்ட வழக்கிலிருந்து எனக்கு சம்மன் வந்தது என்றாலும் நான் அந்த வழக்கில் தரப்பினர் என்றால் சரி. அந்த வழக்கு தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எத்தனை ஐட்ட சொத்திற்கு இந்த வழக்கு போடப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியும் 4 ஐட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த 4 ஐட்ட சொத்துக்களும் யார் பெயரில் வாங்கப்பட்டது என்று தெரியுமா என்றால் மயிலாடுதுறை வெள்ளாந்தெருவில் உள்ள வீடு ஜெயக்குமார் பெயரில் வாங்கப்பட்டுள்ளது. சிதம்பரத்தில் உள்ள வீடும், மணக்குடியில் உள்ள பங்களாவும் ஜெயக்குமார் மனைவி ராஜராஜேஸ்வரி பெயரில் வாங்கப்பட்டுள்ளது.

S கோபாலகிருஷ்ணன்

திருக்கடையூர் மெயின்ரோட்டில் உள்ள இடம் ஜெயக்குமார் பெயரில் வாங்கப்பட்டுள்ளது. மேற்படி 4 ஐட்ட சொத்தை தவிர வேறு எதாவது சொத்து இந்திராணி, பிரகாஷ், சித்ரா மற்றும் என் பெயரில் உள்ளதா என்றால் பிரகாஷ் பெயரில் மட்டும் அவரது தனிப்பட்ட சொத்து உள்ளது. மற்ற யார் பெயரிலும் இல்லை. இந்த 4 ஐட்ட சொத்தை தான் பிரிக்க வேண்டும். நான் தனியாக வக்கீல் வைத்து கட்சி நடத்துகிறேனா அல்லது என் அம்மா கட்சியையே ஏற்றுக்கொள்கிறேனா என்றால் நான் தனியாக வக்கீல் வைத்து வழக்கு நடத்துகிறேன். எனது வழக்கறிஞர் பெயர் SK. Kannan. வழக்குரையில் 7 ஐட்ட சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளது என்றாலும் நான் சொன்ன நான்கு ஐட்ட சொத்துக்கள் தவிர இதர சொத்துக்கள் குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும் மற்றொரு ஐட்ட சொத்து கச்சேரி ரோட்டில் உள்ள 13 கடைகள் உள்ள காம்ப்ளக்ஸ் மற்றும் இரண்டு வீடு இந்த வழக்கு சொத்து. மற்ற இரண்டு ஐட்ட சொத்து பற்றி தெரியுமா என்றால் தெரியாது. கச்சேரி ரோட்டில் உள்ள கம்ப்ளக்ஸ் அமைந்துள்ள அடிநிலம் யாருக்கு சொந்தம் என்றால் மயிலாடுதுறை குமரக்கட்டளை ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி கோவிலுக்கு சொந்தமானது. அந்த கோவிலை வழக்கில் தரப்பினாராக சேர்க்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த 5 ஐட்ட சொத்துக்கள் யாரிடமிருந்து வாங்கப்பட்டது என்பதற்கான சொத்துரிமை ஆவணங்களை நான் பார்த்திருக்கிறேனா என்றால் பார்த்திருக்கிறேன். அந்த ஆவணங்களில் எவ்வளவு ரூபாய் பணம் கிரயத்தொகை என்றும் யார் அந்த பணத்தை கொடுத்தார்கள் என்றும் கண்டுள்ளதா என்றால் கண்டுள்ளது. அந்த பத்திரத்தில் உள்ள விவரங்கள் சரிதானே என்றால் சரிதான். பதிவு செய்யப்பட்ட பத்திரங்களுக்கு விரோதமாக கட்சி நடத்துகிறோமா என்றால் அப்படியெல்லாம் இல்லை. அந்த பத்திரங்களில் கண்ட சொத்துக்கள் ஜெயக்குமார் மற்றும் அவரது மனைவிக்கு சொந்தமான தனிப்பட்ட சொத்துக்கள் என்றாலும் நானும் பிரகாஷ்ம் என் தாயாரை தூண்டி விட்டு இந்த வழக்கை தாக்கல் செய்யவைத்துள்ளோம் என்றால் சரியல்ல. அது கூட்டுக்குடும்ப சொத்து என் தாயாரை நாங்கள் தூண்டிவிடவில்லை. ஜெயக்குமார் மற்றும் ராஜராஜேஸ்வரி பெயரில்உள்ள சொத்துக்களுக்கான சொத்துரிமை அசல் ஆவணங்கள் ராஜராஜேஸ்வரி வசம் தான் உள்ளது என்றால் சரி. அந்த சொத்துக்களின் அனுபவமும் ராஜராஜேஸ்வரி வசம் தான் உள்ளது என்றால் சரி. சாட்சி மீண்டும் கச்சேரி ரோடு காம்ப்ளக்ஸ் பத்திரம் ஸ்டேட் பேங்கில்தான் உள்ளது. என்னிடம் நான் வெளிநாட்டில் இருந்தபோது பவர் கேட்டார்கள் பவர் கொடுத்தேன் என்று சொல்கிறார். மற்ற நான்கு ஐட்ட சொத்துக்களுக்கான பட்டா வீட்டுவரி, மின்இணைப்பு ஆகியவை சொத்தின் உரிமையாளர் பெயரில் உள்ளது என்றால் சரி. வெள்ளாந்தெரு வீடு, சிதம்பரம்

S கோபால் கிருஷ்ணன்

வீடு, பேங்கில் அடமானம் வைத்துள்ளார்கள் என்றால் வைத்திருக்கலாம் தெரியவில்லை. கச்சேரி ரோடு காம்ப்ளக்ஸ் அடிநிலம் கோவிலுக்கு சொந்தம் என்பதால் என்ன பத்திரம் வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ளது என்றால் என் தாத்தா கிருஷ்ணசாமி என் அப்பா சக்கரவர்த்தி பெயருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்திருக்கிறார். அது பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அது எந்த வருடம் செட்டில்மெண்ட் செய்யப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. அந்த செட்டில்மெண்ட் பத்திரத்தையும் காம்ப்ளக்ஸ் ம் வங்கியில் அடமானம் வைத்திருக்கிறார்கள். கோவில் சொத்தை செட்டில்மெண்ட் செய்யமுடியாது என்றாலும் நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. கச்சேரி ரோடு கட்டிடம் கிருஷ்ணசாமியால் கட்டப்படவில்லை என்றால் சரி. சக்கரவர்த்தியால் கட்டப்பட்டது. அந்த கட்டிடம் கட்டப்பட்ட போது எனக்கு என்ன வயது என்றால் 8 வயதிருக்கும். அந்த கட்டிடம் கட்டியதற்கு எங்கள் குடும்பத்தில் ஏதேனும் கணக்கு உள்ளதா என்றால் என் அப்பா உயிருடன் இருந்தபோது பார்த்திருக்கிறேன். அது இப்போது வீணாகியிருக்கும். கச்சேரி ரோட்டில் உள்ள காம்ப்ளக்ஸ் சக்கரவர்த்தி கட்டவில்லை என்றாலும் ஜெயக்குமார் கட்டினார் என்றால் சரியல்ல. முனிசிபாலிட்டி வரி ரசீது என் அப்பா பெயரில்தான் உள்ளது. என் அப்பா இறந்தபிறகு ஜெயக்குமார், பிரகாஷ், கோபாலக்கிருஷ்ணன் பெயரில் மாறிவிட்டது. அது எந்த வருடம் என்றால் என் அப்பா இறந்தபிறகு 1996 க்கு பிறகு எங்கள் பெயரில் மாறிவிட்டது. கட்டிடம் கட்டுவதற்கு அங்கீகாரம் ஜெயக்குமார் பெயரில் தான் உள்ளது என்றால் சரி. அவர் மூத்த பிள்ளை என்பதால் அவர் பெயரில் உள்ளது. வரைபடமும் ஜெயக்குமார் பெயரில் உள்ளது என்றால் சரி. அவர் மூத்த பிள்ளை என்பதால் அவர் பெயரில் உள்ளது. கட்டிடம் கட்ட அங்கீகாரம் வாங்கியபோது என் அப்பா உயிருடன் இருந்தாரா என்றால் உயிருடன் இருந்தார். என் அப்பா 1996 ல் இறந்தார். அப்பா உயிருடன் இருந்தபோதே கட்டிடம் கட்ட ஜெயக்குமார் பெயரில் அனுமதி வாங்கப்பட்டது என்பது உண்மைதானே என்றால் உண்மை தான். அவர் மூத்த பிள்ளை என்பதால் அவர் பெயரில் வாங்கப்பட்டது. அப்பா உயிருடன் இருந்தபோதே ஜெயக்குமார்தான் அந்த காம்ப்ளக்ஸ் ஐ கட்டினார் என்றால் பாகம் கோருவதற்காக மூத்த பிள்ளை என்பதால் அவர் பெயரில் அனுமதியும் வரைபடமும் பெறப்பட்டது என்று பொய்யான கட்சியை எடுக்கிறேன் என்றால் சரியல்ல. அப்படியெல்லாம் கிடையாது. அப்பா இருக்கும்போதே அந்த காம்ப்ளக்ஸ் ஐ கட்டி முடித்துவிட்டார். என் அப்பாவிற்கு குடிப்பழக்கம் உண்டு என்றால் சரி. அவருக்கு குடியால் கல்லீரல் பாதிக்கப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. அவருக்கு தொடர்ச்சியாக மருத்துவம் பார்க்கப்பட்டது என்றால்

S.கோபாலகிருஷ்ணன்

சரியல்ல. அவர் poison சாப்பிட்டு இறந்துவிட்டார். அவர் எதற்காக விஷம் சாப்பிட்டார் என்றால் ஜெயக்குமார் திட்டியிருக்கலாம். நான் அப்போது கேரளாவில் இருந்தேன் நான் வருவதற்குள் உடலை எடுத்துவிட்டார்கள். எதனால் விஷம் குடித்தார் என்று விசாரித்தேனா என்றால் இல்லை. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. குடும்பத்தில் எங்களுக்குள் எப்போது ஒற்றுமை குறைவு ஏற்பட்டது என்றால் 2012 ம் வருடம் கேஸ் போடுவதற்கு முன்பு. இந்த வழக்கு போடுவதற்கு முன்பு கிராம பஞ்சாயத்து, காவல் துறையில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் பஞ்சாயத்து பேசி வைத்திய செலவுக்காக ஜெயக்குமார் என் தாயாருக்கு பணம் கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது. அந்த பஞ்சாயத்தில் நான் கலந்து கொள்ளவில்லை நான் ஊரில் இல்லை கேள்விப்பட்டேன். எத்தனை வருடம் அப்படி பணம் கொடுத்தார் என்று தெரியுமா என்றால் தெரியாது என் அம்மாவிற்குதான் தெரியும். நான் எதாவது பாகம் கேட்டு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். அந்த வக்கீல் நோட்டீஸ் நகலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தாக்கல் செய்யவில்ல என்றால் சரியல்ல. அந்த நோட்டீஸில் எவ்வளவு பாகம் கேட்டுள்ளேன் என்றால் 4 பேருக்கு ஆளுக்கொரு share கேட்டோம். இந்த வழக்கில் நானோ எனது தாயாரோ தாவா சொத்து சம்பந்தமாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. அம்மா போட்டிருப்பார். சொத்துக்கள் அனைத்தும் ஜெயக்குமாருக்கும் ராஜராஜேஸ்வரிக்கும் சொந்தம் என்றாலும் அதனால் தான் சொத்துரிமை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஜெயக்குமாருக்கும் ராஜராஜேஸ்வரிக்கும் சொந்தமான சொத்துக்களை அபகரிக்க வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றாலும் நான் கோரியபடி எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் வெளிநாடு போய் சம்பாதித்து பணம் கொடுத்திருக்கிறேன். டாடா ஏசி வண்டி ஓட்டி பணம் கொடுத்தேன். பூர்வீக சொத்திலிருந்து வந்த வருமானம், காம்ப்ளக்ஸ் ல் வந்த வருமானத்தை கொண்டு ஜெயக்குமார் பெயரிலும் அவர் மனைவி பெயரிலும் சொத்து வாங்கப்பட்டுள்ளது. ஜெயக்குமாருக்கும் அவர் மனைவிக்கும் எந்த தனிப்பட்ட வருமானமும் இல்லை. வாசாஆ 1 தாவா 1ம் ஐட்ட சொத்தை பொறுத்து மட்டும் அனுப்பப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது எல்லா சொத்துக்கும் சேர்த்து வக்கீல் நோட்டீஸ் அனுப்பியதாக என் அம்மா சொன்னார். நான் எந்த வருடம் முதல் எந்த வருடம் வரை நான் என் தாயாருக்கு பணம் அனுப்பினேன் என்றால் 2004 முதல் 10 வருடங்கள் அனுப்பினேன். அதற்கான ஆவணங்கள் அனைத்தையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தாக்கல் செய்திருக்கிறேன். அந்த பணம்

S.சோமசுந்தரம்

என் தாயாருக்கு அனுப்பிய பணமே தவிர அதற்கும் ஜெயக்குமாருக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அந்த பணத்தை ஜெயக்குமார் கடை பிஸ்னஸ்காக வாங்கிகொண்டார். நான் சொல்வது தவறு என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதி தாக்கல் செய்துள்ள Ex. A7 ஆவணத்தில் ( 4, 5, 7 ஆகிய ரசீதுகள் படி ) என்னுடைய account லிருந்து என் account ற்கே அனுப்பி பெற்றுக்கொண்டதாக உள்ளது என்றால் சரியல்ல. அந்த ரசீதுகள் நான் அனுப்பிய பணத்திற்கான ரசீதுகள் இல்லை. நான் அரபு நாட்டில் வேலை செய்யவில்லை. நான் ஆவணத்திற்கு விரோதமாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு NRI account இல்லை. Ex. A7 ஆவணத்தில் கண்ட பணம் எதுவும் தாவா சொத்துக்கள் வாங்ககுவதற்கு பயன்படுத்தப்படவில்லை என்றாலும் தொடர்பில்லாத ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அது பிரகாஷ் அனுப்பிய பணத்திற்கான ரசீதாக இருக்கலாம். சொந்தமில்லாத சொத்தை அபகரிப்பதற்காக பொய் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு ...னை என்னால் தட்டச்சருக்கு எடுத்துச் சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்த எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

07/12/20